# ஜப்பான் பிரதமருடன் பிரதமர் மோடியின் சந்திப்பு

செப்டம்பர் 09, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி, 9 செப்டம்பர் 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டையொட்டி, ஜப்பான் பிரதமர் திரு. ஃபுமியோ கிஷிடாவுடன் இருதரப்பு சந்திப்பை நடத்தினார்.

இந்த சந்திப்பின் போது, இரு தலைவர்களும் தத்தமது ஜி20 மற்றும் ஜி7 தலைமை பொறுப்புக்கான முன்னுரிமைகள், குறிப்பாக உலகளாவிய தெற்கின் கவலைகள் மற்றும் அபிலாஷைகளை முன்னுக்குக் கொண்டுவருவதில், ஆண்டு முழுவதும் இரு நாடுகளின் ஆக்கபூர்வமான உரையாடலை ஒப்புக்கொண்டனர்.

உள்கட்டமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, முதலீடுகள் மற்றும் எரிசக்தி உள்ளிட்ட இந்தியா-ஜப்பான் இருதரப்பு கூட்டுறவின் பல்வேறு அம்சங்கள் குறித்து தலைவர்கள் கலந்துரையாடினர்.

இரு தலைவர்களும் இந்தியா-ஜப்பான் சிறப்பு மூலோபாய மற்றும் உலகளாவிய கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்துவதற்கான தங்கள் நிலையை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

**புது தில்லி**
**செப்டம்பர் 09, 2023**